Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஹூ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூல] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ஹூ ஆடி மீ உரு உ வெள்ளிக்கிழமை (9 AUGUST 1957) [இல-கஅ]

## முதுபெரும் புலவர்
## உயர்திரு. வெ.ப.சுப்பிரமணியமுதலியார்
## நூற்றாண்டு நிறைவு

'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சரித்திரம்' என்னும் செய்யுள் நூலை இயற்றியவர் சிவகாசி அருணசலக் கவிராயர் அவர்கள். இதனைப் பரிசோதித்து வெளியிட்டவர் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். இவ்வரிய நூல் 1898ஆம் ஆண்டு வெளிவந்தது. இதனை வெளியிட்டபொழுது முதலியார் அவர்கட்கு வயது நாற்பது. முதலியார் அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வாழ்ந்த பெரியார்.

தமிழகத்தில் 'நாவலர்' என்பது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரையே குறிப்பதுபோல் 'முதலியார்' என்பது வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களையே குறிக்கும்.

'கல்வி, அறிவு, ஒழுக்கம்' என்னும் மூன்றும் நிறையப்பெற்றவராய் 'நிறைமொழியாளராய்' வாழ்ந்த இப்பெரியார், 1857-ஆம் ஆண்டு,எட்டாந்திங்கள், பதினன்காம்நாளில் 14-8-1857) தென் இந்தியாவில் உள்ள ஆழ்வார் குறிச்சியிற் பிறந்தார்கள். இப்பெரியாரை 12-10-1946 சனிக்கிழமை தமிழ் உலகம் இழந்தது. புகழுடம்பெய்திய முதலியார் அவர்களின் நூற்றூண்டு 14-8- 957-ல் நிறைவுறுகின்றது.

தமிழ் வளர்ச்சியை - தமிழரசை-விரும்பும் தமிழ் மக்கள் தமிழ்ப் பெரியார்களின் திருநாட்களை நினைப்பதும், அவர்கள் காட்டிய வாழ்க்கை நெறியில் நிற்பதும் முன்னேற்றத்துக்குரிய சிறந்த வழியாகும். பாலர், பாமரர், பண்டிதர் யாவரும் 'தொன்மை மறவேல்' என்பதை நினைந்து 'பழமைபாடிச் செழுமை தேடு' என்பதைப் பாராட்டி வருவாராயின் தமிழ்ப் பண்பு தலைசிறந்தோங்கும்.

முதலியார் அவர்கள் இயற்றிய 'அகலிகை வெண்பா' வுக்குச் சிறந்த, விரிந்த ஆராய்ச்சி முகவுரையினை அளித்த மகா வித்துவான் பாஷாகவி சேகரர் ரா. இராவையங்கார் அவர்கள், முதலியார் அவர்களின் பெருமையினை அழகாகக் கூறியுள்ளார்கள்,

"சீவனோபாயத்திற்காக ஒவ்வோர் தொழிலை மேற்கொள்ளினும், நல்லோனொருவன் தன் பாஷை, ஜாதி மதம் அவற்றிற்குச் சிறந்த ஒழுக்கம் வழக்குகளை விடாது போற்றுவானயின், அவனே முன்னைத் தொட்டுப் பெருமை வாய்ந்த தன்றேயத்தை யழியாது காத்து வளர்ப்பவனவன். ஒரு தேயத்தார் மற்றையரின் வேறாக நிலைத்து வளர்தற்கு இப்பாஷை முதலியன முக்கியமான வேர்களாக விளங்குதல் ஒருதலை. தன்றேயத்தின்பாஷையை மறப்பவன், தன்றேயமாகிய பல்லோர் பயன்றுய்க்கும் பழுமரத்தின் வேரினை,

ஆசிரியர்
திரு. மா. பீதாம்பரன்

அடியறுத்தவனதல் உண்மை. இங்ஙனந் தானும் பிறரும் வாழ்தற்கு இனிய நிழலும் உரிய பயனும் அளிக்கும் தாய்நாடாகிய பழுமரத்தின் அடிவேரறுப்பவர் பலர் மலிந்த இக்காலத்து, எத்துணையோ இடையூற்றை எதிர்த்து அதனைப் பாதுகாத்து வளர்க்கப்புகும் பெரியோர் மிகவும் அரியரேயாவர். இவரே இக்காலத்துச் செயற்கரிய செய்பவராகிய பெரியர் எனப்படுவார். இவ்வரிய பெரியார் மிகச் சிலருள், இச்சுப்பிரமணியப் பெருந்தகையே முதலியார் என்று யான் கூறுவதற்குப் பலரும் உடன்படுவர்என்று கருதுகின்றேன். இவர் தமிழன்புந் தமிழறிவுந் தமிழ்க்கவி வன்மையும், பலகாலும் பயின்றறிந்த நன்மக்கள், இதனைத் துதிவாதம் என்று கருதார் என்று துணிகிறேன்".

முதலியார் அவர்களைக் குறித்து முத்தமிழ்ப் பேராசிரியர், சுவாமி விபுலாநந்தர் அவர்கள் கூறியவற்றுட் சில:

" 'புதுவது கிளந்த யாப்பின் மேற்'றாகிய கவிதை பெருவரவிற்றாகிய இக்காலத்திலே, தொன்மை நலஞ் சிறிதுங் குன்றாத செய்யுள் செய்யும்புலவர்மிகச்சிலரேயாவர். அப்புலவர் வரிசையிலே முதற்கண் வைத்து எண்ணுதற்குரியவர் வெள்ளகால் கிழார் (சுப்பிரமணிய முதலியார்) இயற்றியதனிச் செய்யுளகத்துக் காணப்படும் கவியழகுகள் பலதுறைய.

வெள்ளகால் கிழாரது வாழ்க்கையிலும் செய்யுளிலும் இயைந்து நின்ற சால்பின் பொலிவினை உற்று நோக்குங்கால்,

"ஆற்றுதல் என்பதொன்
றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது
புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது
பாடறிந் தொழுகுதல்,
அன்பெனப் படுவது
தன்கிளை செருஅமை,
அறிவெனப் படுவது
பேதையர் சொன்னேற்றல்,
செறிவெனப் படுவது
கூறியது மறுஅமை,
நிறையெனப் படுவது
மறைபிறர் அறியாமை
.................................
பொறையெனப் படுவது
போற்றாரைப் பொறுத்தல்"

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### சைவப் பிரசங்கம்

3-8-57 சனிக்கிழமை இரவு வியாவில் (காரைநகர்) சைவ பரிபாலன வித்தியாசாலைத் திருநாவுக்கரசுநாயனர் மண்டபத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமான் பொன். நவரத்தினம் அவர்கள் தலைமையில் சைவப் பிரசங்கம் ஒன்று நடைபெற்றது. ஸ்ரீ சிவபாத சுந்தரம் அவர்கள் நாவலரின் அடிச்சுவட்டைப்பின்பற்றி சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றி வந்தாரென்றும் அத்துடன் அமையாது தமது மாணவர்களிற் பலரை நல்முறையில் பயிற்றித் தேச சேவை செய்பவர்களாக ஆசிரிய உலகத்திற்குத் தந்திருக்கின்றரென்றும் பாராட்டி அவருக்கு இறைவன் திருவருள் கிடைக்கவேண்டுமென்று தலைவர் தமது தலைமை உரையிற் பரமேஸ்வரனைவேண்டிக்கொண்டார்.

சமய குரவரில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றிப் பரமேஸ்வரக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீமான் மு ஞானப்பிரகாசம் B. A.; B. Sc. அவர்கள் பேசும்போது நாங்கள் சைவவாழ்வு வாழவேண்டிய அவசியத்தைப் பற்றி விளக்கிக் கூறினர்.

### ஒப்பந்தம்பற்றி ஐ.தே.கட்சி

முதல்மந்திரிக்கும் சமஷ்டிக் கட்சிக்குமிடையில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தை எதிர்ப்பதற்கு நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளுடைய ஆதரவையும் திரட்டவேண்டுமென்றும் அதற்குச் சாதகமாக 18-8-57ல் மாபெருங் கூட்டமொன்று நடத்த வேண்டுமென்றும் ஐக்கிய தேசியக் கட்சியார் தீர்மானித் திருக்கின்றனர்.

### கிராமச் சங்கத் தலைவர்

நீர்வேலி கிராமச் சங்கத் தலைவராக, திரு வல்லிபுரம் இராசா தெரிவு செய்யப் பெற்றுள்ளார். ஊரெழுவாசியாகிய திரு. இராசா அவர்கள் மலாயாப் புகையிரதப் பொருள் பாதுகாப்புப் பகுதியிற் கடமையாற்றியவர். அவரது திறமை கணிக்கப்பெற்று அவருக்கு ஐ. எஸ். எம் பட்டம் வழங்கப்பட்டது. தாய்நாட்டுக்குத் திரும்பிய பின் ஊரெழு பிள்ளையார் கோயில், கணேசவித்தியாசாலை சனசமூகநிலையம் ஆதியவற்றின் கருமங்களில் வழிகாட்டியாய்த்தொண்டுசெய்துள்ளார். அவருடைய பரந்த அனுபவம் சமூகத்துக்குப் பயன்படுமென்று கருதப்படுகின்றது.

ஆசியல் அலை

## 'பனங்கொட்டை'என்று
## பிரதமரின் பரிகாசம்
## இளக்காரம் கண்டு - இறுமாப்பா?
### தோளிலிருந்து செவியைத் - தாவும் தோழமை!

—★—

அரசாங்க சபைத் தமிழ்அங்கத்தவரை அன்ருருநாள் திரு. பண்டாரநாயக 'திராவிடக் காடையன்' என்று வெட்கம் நாணம் இன்றி வசைபாடினர். அப்பொழுது பிரதமராகக் கனவு கண்டு வந்தகாலம். பிரதமராகப் பதவி ஏற்றபின் பண்பாடு மாறியிருக்கலாம் என்ருல் இப்பொழுது யாழ்ப்பாண நாட்டைப் பரிகசிக்கும் நோக்கத்துடன் திரு. சுந்தரலிங்கமவர்களைப் 'பனங் கொட்டை' என்று வசைகூறியிருக்கின்றூர். இதன் பொழிப்பென்ன! இணக்கத்தால் விளைந்த இறுமாப்பா......? இளக்காரத்தால் எழுந்த இரணியக் குணமா?

"பனங் கொட்டை' என்று சொல்வது யாழ்ப்பாண நாட்டின் பொருளாதார வளத்தைக் குறிப்பிடுவதாகும் என்பதைத் தமிழ் மக்கள் நன்குணர்வர் ஆகையினல் அது வசை மொழியென்று எண்ணவும் வேண்டியதில்லை. ஆனல் இவ்வாறு பிரதமர் திரு. சுந்தரலிங்கத்தைப் பார்த்துக் கோபக் குறியுடன் கூறியபொழுது அச்சொற்கள் வசை வேடம் எடுக்க நேர்ந்தன.

கோபம் கொள்ளும் பொழுது மதியை யிழந்து பழிச்சொல்லும் வசைமொழியும் உபயோகிக்கின்றவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் வினையைத் தேடிவிடுகின்ருர்கள் என்பது உலக அநுபவ உண்மை.

'சினமென்னுஞ் சேர்ந்தாரைக்
கோல்லி இனமென்னும்
ஏமப்புணையைச் சுடும்"

என்ற வளளுவர் மதிமொழி போலப் புதிதாக உண்டான இனக் கொண்டாட்டத்தை பண்டாரநாயகவின் சினம் சிதைத்துவிடும் என்றே பலர் எண்ணுகின்ருர்கள்.

### பிரதமரின் பேச்சலங்காரம்!

பனங்கொட்டை! என்ன ஐயா என்று மனமுவந்து இன வசை எடுத்தாண்ட பிரதமர் அந்த ஒப்பந்தத்தைப்பற்றி நாளுக்கு நாள் திரித்தும் விரித்தும் பிரித்தும் வருவித்தும் சரித்தும் கூறிய வண்ணமாய்த் தனது பேச்சலங்காரத்தைக் காட்டி வருகின்ருர். பாராளுமன்ற அங்கத்தவர்களோ (முக்கியமாகத் தமிழ் பேசும் அங்கத்தவர்கள் — திரு. சுந்தரலிங்கம் புறநடை) இந்தப் பேச்சு நடையழகைப்பற்றி ஒன்றும் சொல்கின்ருர்களில்லையே! சொல் வன்மையி

(தொடர்ச்சி6 -ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஸூ ஆடி மீ
உரு வ வெள்ளிக்கிழமை


## கானலா? நீரா?

"கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு" என்று தீ நட்பின் பொல்லாங்கை எடுத்துரைக்கும் பொழுது வள்ளுவனார் அந்த உறவு ஆகாதென்று காட்டியிருக்கின்றார். சொல் வேறு வினை வேறு என்ற விபரீதம் எழுவதற்கு முன்னமே சொன்ன சொல்லையே திரித்துச் சொல்கின்றவர்களின் உறவு எத்துணைத் தீமையுடைத்தென்பது சொல்லாமலே யமையும். முதல் அமைச்சர் காலையில் ஒன்று கடும் பகலில் இன்னொன்று மாலையில் மற்றொன்றாகச் சமஷ்டிக் கட்சித்தலைவர்களுடன் உடம்பட்ட முடிபுகளுக்குப் பலவேறு வகையாய்ப் பயன் கூறுகின்றார். இத்தகைய அமைச்சர்களின் இயல்பை எண்ணிப்போலும் பெருநாவலர்:

"வெண்மை யெனப்படுவதியாதெனின்
ஒண்மை உடையம் யாம்
என்னும் செருக்கு"

என்று கூறிப்போந்தனர்.

தமிழ் மக்களுக்குக் குறித்த ஒப்பந்தத்தினால் உண்டாவது நன்மையா? தீமையா? என்று ஆராயுங்கடன் தலைவர்களை மட்டும் பொறுத்திருக்கவில்லை. பொது மக்கள் குணம் நாடிக் குற்றமும் நாடி மிக்க கொள்வதற்கு இந்த உடம்படிக்கையையும் தலைமை அமைச்சர் அதனை விளக்கிப் பாராளுமன்றத்திலே கூறியவற்றையும் தெளிந்தறிந்து

"வருமுன்னர்க் காவாதான்
வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக்கெடும்"

என்றாங்கு தீங்கு நிகழ்வதற்கு முன் ஆவன செய்யும் கடமை உள்ளவர்கள். பழியெனின் உலகுடன் பெறினுங்கொள்ளார் என்ற தமிழ்ப் பண்பாட்டை மக்கள் மறக்க மாட்டார்கள். எனவே இந்த ஒப்பந்தத்தை உள்ளவாறு உணர வேண்டியவர்கள் மக்கள். கட்சித் தலைவர்கள் ஒருவரோடொருவர் வெற்றி தோல்வி வீரம் கோழைத்தனம் என்பனவற்றைப் பற்றிப் பேசி ஆராயப்பட வேண்டியதை விட்டு வெற்று மொழி வீச்சிலே மபாழுதை வீணாக்காது மக்கள் அறிந்து கொள்வ

# நாயன்மார் குருபூசைகள்

—:0:—

## சிறந்தமுறையில்நடக்க ஆவனசெய்க

சைவத் தமிழ்ப் பாடசாலைகள் அன்று சைவத்தையுந் தமிழையும் வளர்க்க எழுந்தன; வளர்ந்தன. ஆனால் இன்று அவை வெளித்தோற்றத்தளவில் நடிப்பு மாத்திரையேயன்றி, அந்தரங்க சுத்தியுடன் கருமமாற்றுகின்றில. குறைகூறும் இதே சந்தர்ப்பத்தில் சில பாடசாலைகளின் சமயப் பணியை மெச்சாமலுமிருக்க முடியவில்லை.

சைவசமய சப்பந்தமான பாடசாலைகளில் நாயன்மார்

**வித்துவான் பண்டிதர் திரு பொ. கந்தையனார் கல்வயல்**

குருபூசைகள் நடைபெறுகின்றன. பெரும்பாலும் வயிற்று மாரியம்மனுக்கே பூசை நடக்கின்றது. சில பாடசாலைகளில் மட்டும் அற்றைத்தினம் தவப்பொழுதாகக் கழிகின்றது.

முறையான குருபூசை வைபவத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கல்வயல் சண்முகானந்த வித்தியாசாலையில் நாயன்மார் குருபூசைகள் சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

சென்றவாரம் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை அங்கே நடைபெற்றது. அப்பாடசாலையில் மேல் வகுப்பில் படிக்கும் இரு பிராமணச் சிறுவர்கள்; ஒருவர் சுந்தரருக்குப் பூசை செய்தார். அவரது தேவாரத் திருப்பதிகங்களைப் பண்ணுடன் பாடினார் இன்னொருவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சரிதத்தைக் கதாப்பிரசங்கம் செய்தார். பக்திச்சுவை பெருகிப் பூசை வெறும் வயிற்றுப் பூசையாக நிகழாது ஆன்மார்த்த பூசையாக நிகழ்ந்தது. அற்றைத் தினம் சைவமாணவரது தவப் பொழுதாகக் கழிந்தது. இம்முறையை ஏனைய சைவத் தமிழ்ப் பாடசாலைகளும் மேற்கொள்ளுதல் நன்று இவ்வாறு இழந்த நம் பழந்தமிழ்ச் சைவப் பண்பை மீட்டுப் பெறலாகும். சைவத் தமிழ்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களும் முகாமைக்காரரும் சைவ நாயன்மார் குருபூசையைச் சிறந்தமுறையிற்கொண்டாட ஆவனசெய்வார்களாக

# சமய அடிப்படையில்
## வாழ்க்கை அமைய வேண்டும்

**நாட்டின் சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்கும் இதுவே வழி**

கிராம அபிவிருத்தியின் முக்கிய தேவை என்னவெனின் அதன் ஆத்மீக நோக்கத்திற்கு, புதுமெருகு கொடுப்பதாகும். மக்கள் இலகுவாகச்சென்று இறைவனை வழிபடச் செய்யும் நோக்கத்தோடு அநேக கோவில்களையும் தேவாலயங்களையும் மசூதிகளையும், விஹாரைகளையும் கட்டிய நம் முன்னோரின் மகிமையே மகிமை அவர்கள் ஏற்படுத்தித்தந்த இவ்வசதியை நம்மில் எவ்வளவுபேர்பயன் படுத்திக் கொள்கின்றோம்? மக்களிடையே சமய வழிபாட்டை வளர்த்து அவர்களின் வாழ்க்கையைச் சமயஅடிப்படையில் அமையச் செய்வது கிராம அபிவிருத்திச் சங்கங்களின் கடமையாகும்.

நாட்டிலே சமாதானத்திற்கும் முன்னேற்றத்திற்கும் மிக உறுதி வாய்ந்த அத்திவாரம் இதுவேயாகும். எந்நாட்டிலும் உலோகாயத வாதமே எல்லாத் தீங்குகளுக்கும் காரணமாயுள்ளது. உலோகாயதத்தை ஆத்மீக இலட்சியங்கள் மூலமாக அமுக்கி விடுவதற்கு உங்களுடைய சங்கங்கள் தம்மாலானவையெல்லாம் செய்யவேண்டும்.

தற்போது பொருளாதாரப்புரட்சியொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்ற காலத்தில் வடபகுதி இளைஞர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள பல்வேறு இலிகித சேவைப் பிரிவுகளில் வேலைவசதி காணக்கூடியதாயிருந்தது. ஆனால் அவ்வழிகள் யாவும் இப்போது படிப்படியாக மூடப்பட்டு வருகின்றன. மாறிவரும் சூழ்நிலைக் கேற்ப நம்மைநாமே தயார்செய்து கொள்ளவேண்டும். நவீன முறைகளைக் கையாண்டு விவசாய, கைத்தொழில் முயற்சிகளில் இறங்குதல் இலாபகரமானதும், சுய முயற்சியாயும் விளங்குவது மட்டுமன்றிஒவ்வொருவருக்கும் ஆரோக்கியமும் மனமகிழ்ச்சியும் அளிப்பதாகும். உங்கள் எதிர்காலச் சந்ததியின் சுபீட்சம் நீங்கள் இப்போது மேற்கொள்ளும் ஊக்கத்திலும் முயற்சியிலும் தங்கியுள்ளது என்று கிராமத்தலைவர்களின்வருடாந்தவகுப்பைச் சாவகச்சேரியில் ஆரம்பித்தபோது அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்கள் கூறினார்.

# மாண்பு மிக்க மாசி உத்திரமே திருவள்ளுவர் திருநாள்

—o—

## ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நாவலர் கருத்தே ஏற்கவேண்டியது

—:0:—

# மறை நெறி நிற்றலே
## தமிழ்மறைக் கழகத்துக்குத் தகுதி

சென்ற 21-6-57 ல் வெளிவந்த இந்துசாதன இதழில் "தமிழ்மறைக் கழகமும்—வைகாசி அநுஷமும்" என்னும் மகுடத்துடன் திருவள்ளுவர் திருநாள் மாறிவந்த விந்தையைப்பற்றித் தமிழ் மக்களது — சைவ மக்களது சிந்தனையைத் தட்டி உள்ளத்திலே உணர்ச்சி ஊற்று எழத்தக்க விதத்திலே "நாவலர் மரபையே நாம் கடைப்பிடிக்க வேண்டும்" என்ற நயமான கருத்தை— வித்துவான் பண்டிதர் திரு. பொ. கந்தையனார் அவர்கள் தமது துணிவு மிக்க எழுதுகோலினாலே திறமையாகவும் தக்க சான்றுகளுடனும் எடுத்து விளக்கியிருப்பதைக் கண்டேன். "உண்மையை உணர்ந்தவர்கள்—பெரு மக்களைப் பின்பற்றுகிறவர்கள்—மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்ற கருத்துக்கு மதிப்புக் கொடுப்பவர்கள் உலகில் முற்றாக அற்றுவிடவில்லை என்பதைக் கண்டு களிப்படைந்தேன்.

"கல்லூரிகளிலும் — சர்வ கலாசாலைகளிலும் கற்றுத் தேறி வெளியேறும் தமிழ்ச் சிறார் சங்கங்கூடிப் பங்கமுறவதும், கழகங்கண்டு கலகஞ் செய்வதும் கண்கூடு அன்னாரை நல்வழிப்படுத்த வேண்டாவோ? என்று எங்கள் நாவலர் நற்றகையாரை உச்சி மேற்கொண்டு போற்றி வாழும் பண்டிதர் அவர்கள் கேட்ட உயிரோட்டம் நிறைந்த கேள்வி—உண்மை அறிகிறவர்களது உள்ளத்தை வருத்துவதாகவிருக்கின்றது.

தற்கு தவியாகும் வழியில் உரையாடுவதன்றோ பண்பு

கானலா நீரா என்று முடிபுக்கு வரமுடியாத விடத்திலே உண்மையையறியும் வண்ணம் பொருள் விளக்கம் கொடுப்பதே கற்றறிந்தார் கடன். உடம்பாட்டின் உட்பொருள் யாதென்று உலகறிய வேண்டியது ஒருதலை.

வள்ளுவருக்கு விழாக் கொண்டாடி இன்புறும் இளஞ்சிறாருக்கு நல்லைநகர் நாவலர் நவின்ற மாசி உத்தரமே மாண்புமிக்கது என்பதை உரிமையுடனும், பெருமையுடனும் அன்பு சொட்ட அமுதூட்டியவாறு தெருட்டியதுமன்றி வள்ளுவப்பெருந்தகையாரது பேரில் முந்நூற்றறுபத்தைந்துநாளும், ஆண்டாண்டுதோறும் விழாக் கொண்டாடினாலும் தகும். ஆனால் வருஷமொருமுறை கொண்டாடுவோர் — நாவலர் பெருமான் சொன்ன, ஆன்

**திரு வே பூவிலிங்கம்**
**நாயன்மார்கட்டு**

ரோூர் மரபொடுபட்ட மாசி உத்தரப் பெருநாளில் கொண்டாடுதலே சிறப்புடைத்தென்பது எமது கருத்து என்று இனிய உள்ளத்துடன் ஏற்றமான ஒரு திருப்பணிக்குத் தமிழ்மக்கள் — சைவமக்கள் எல்லோரையும் அன்பாய் அழைத்திருப்பது எங்கள் பண்டிதர் அவர்களது தமிழ்ப் பண்பு செறிந்து — பரந்துபட்ட உள்ளத்தையும் உண்மை நெறிக்குட்பட்டு நிற்கும் சிறப்பினையும் ஐயந்திரிபறக் காட்டுவதாகும்.

"நல்லை நகர் ஆறுமுக
நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே?
சுருதி எங்கே?
எல்லவரும் ஏத்து
புராணுகமங்கள் எங்கே?
பிரசங்கம் எங்கே.........
.................?"

என்றெல்லாம் சைவத்தமிழ் உலகத்தினால் மெச்சப்பெற்ற உத்தமர் நல்லூர் ஆறுமுக நாவலரைத் தாழ்த்திவிட்டு— வள்ளுவர் நாள்பற்றி அவர் கூறிய மாசி உத்தர தினத்தைத் தள்ளிவிட்டு, நாவலர் சைவமதத்தவர், ஆதலால் அவரது கருத்தைக் கொண்டால் மற்றைய மதத்தவர்கள் ஒத்து—ஒருமித்து—பக்தியுடன் எத்திசையும் உத்தமமாய்க் கொண்டாட முன்வரமாட்டார்கள். ஆதலால் ஒரு புது நாளை — ஒரு பொது நாளைத்தெரிந்தெடுத்து அதை வள்ளுவர் நாளாக்க வையகமெங்கும் ஒருவர் முயற்சியெடுத்ததாக அறிந்தேன். சைவ உண்மையை உட்பொதிந்து சைவத்தின் கருவூலமாக வுள்ள ஒழுக்கச் சிறப்பினை உறைப்பாக இடித்துரைக்கும் ஒப்பற்ற திருநூலாம்—திருக்குறளைத் தந்த திருவள்ளுவ நாயனாரை உலகத்தார் ஒருமித்துக் கொண்டாட வேண்டும். எண்தொகைக்குப் பலப்பல சங்கங்கள் பங்குகொள்ள வேண்டும் என்று விரும்புவது, கொள்கையும் கோட்பாடும் வேண்டாம்—காட்சிச் சிறப்பு ஒன்றே போதும் என்ற கருத்தினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

எல்லா மதத்தவரும் ஒருமித்துக் கொண்டாட வேண்டிய விழா திருவள்ளுவர் விழா என்பது உண்மையே. வைகாசி அநுஷத்திலோ

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களைத் தலைமுறை தலைமுறையாகப் பாதிக்கும்

## ஒப்பந்தத்தைப்பற்றி திரு. ச. பேரின்பநாயகம் அவர்கள் கருத்து

தமிழ் பேசும் மக்களுக்கும் இன்றைய அரசாங்கத்திற்கும் தமிழரின் மொழியுரிமையைப்பற்றியே பாரதூரமான முரண்பாடு இருந்தது. இருக்கிறது. தமிழ் அரசுக் கட்சியும் திரு. பண்டாரநாயக்காவும் செய்த ஒப்பந்தத்தில் இந்த முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு யாதும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

தனிச் சிங்களச் சட்டம் நிறைவேறியபோது ஏற்பட்ட கொந்தளிப்பு தமிழ் இனத்திற்கு இலங்கையிற் சட்ட ரீதியாய் ஏற்பட்ட இழிவைச் சகிக்க முடியாமையாலேதான் எழுந்தது. தமிழரசுக் கட்சியே இந்த இழிவு நிலையை மாற்றவேண்டுமென்று கங்கணங் கட்டி நின்றது. தமிழ் மக்களும் இக் கட்சி மொழியுரிமைக்காக வாதாடும் என்று நம்பியபடியால் இந்தப் பொறுப்பை இக் கட்சியிடத்திலேயே விட்டுவிட்டு இயன்ற ஆதரவும் கொடுத்து நின்றனர். ஆனால் பிராந்திய சபையின் அமைப்பில் மாத்திரம் திரு. பண்டாரநாயக்கா சில திருத்தங்கள் செய்வதாக ஏற்றுக்கொண்டவுடன் தமிழரசுக் கட்சி தமிழரின் மொழியுரிமைப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டது.

மொழியுரிமை திட்டவட்டமாய்ச் சட்டரீதியாய் உறுதிப்படுத்தும் வரையும் இந்தநாட்டில் ஒற்றுமை தோன்ருது. தமிழரசுக் கட்சி போராட்டத்தைக் கைவிட்டாலும் தமிழினம் கைவிடும் என்று எண்ணுவதற்கிடமில்லை. பேரளவிலேதான் இது மொழியுரிமை; உண்மையில் அடிப்படைப் பிரச்சினை வேறு. சிங்களம் பேசுவோருக்கு உரிமைகள் சலுகைகள் கூட; அவர்கள் உயர்தர பிரசைகள்; தமிழ் பேசுவோர் உரிமை குறைந்த இழிதரப் பிரசைகள். இந்தநிலை சட்ட ரீதியாய் நிறுவப்பட்டது; சட்ட ரீதியாய் அகற்றப்பட வேண்டும்.

ஆனல் இப்போது நிறைவேறிய ஒப்பந்தத்தைப் பாராட்டுவோர், தமிழினத்தின் மொழியுரிமைக்காகவே போராட்டம் ஆரம்பித்தது என்பதையும் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே சமரசப் பேச்சு நடைபெற்றது என்பதையும் மறந்து போனுர்கள் போலும்.

சத்தியாக்கிரகம் போன்ற நேரடி நடவடிக்கைகளால் நாட்டில் பெரிய கலகம் ஏற்படும் என்றும் அப்படி ஏற்படின் அது மிகவும் பயங்கரமான பலாபலனை விளைவிக்கும் என்றும் பலர் ஏக்கமுற்றிருந்தனர், ஆகையால், சத்தியாக்கிரகம் கைவிடப்பட்ட தென்பதைப் பலரும் ஆதரிக்கின்றனர். அத்துடன் தமிழரசுக்கட்சி செய்த மொழியுரிமை ஒப்பந்தத்தையும் ஆதரிக்கின்றனர். இரண்டிறகும் தொடர்பு சிறிதும் இல்லை. சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டும் மொழியுரிமைப் போராட்டத்தைக் கொண்டு நடத்தலாம். சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டால் மொழியுரிமைப் போராட்டத்தையும் கைவிடவேண்டுமென்பது பெறப்படவில்லை.

தமிழரசுக்கட்சி கைவிட்டாலும் தமிழினம் இந்த உரிமைப் போராட்டத்தைக் கைவிடமுடியாது. இந்த ஒப்பந்தத்தை ஏற்ருல் என்றும் இந்த நாட்டில் தமிழினம் இழிமைபூண்டே வாழவேண்டும். திரு. பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியதில் இருந்து, தமிழருக்கு வந்த தீங்கிலும் பார்க்க இந்த ஒப்பந்தத்தை ஏற்பதால் வரும் தீங்கு தமிழரைத் தலைமுறை தலைமுறையாகப் பாதிக்கும்.

### ஸ்ரீ சிவபாதசுந்தரனுர் தினம்

மேற்படிதினம் 1-8-57 வியாழக்கிழமைகாலை திருக்கேதீச்சரம் தொண்டர்துறை திருமடத்தில் அகில இலங்கைச் சிவனடியார்சங்க ஆதரவில் கொண்டாடப்பட்டது. திருக்கேதீச்சரத் திருக் கோயிலில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ நடேசப் பெருமானுக்கு விசேட பூசைகளும் அர்ச்சனையும் செய்யப்பெற்றன. சிவனடியார்களால் திருமுறைகள் ஓதப்பெற்ற பின் மகேஸ்வரபூசை நடைபெற்றது.

இவ்வருடம்புலோலியைச் சார்ந்த திரு. ம. க. வே. நடராசா B Sc, திருவாளர் கார்த்திகேசு உபாத்தியாயர் ஆகியோருடைய உதவியும் கிடைத்தது. அன்று பிற்பகல் சிவனடியார் சங்கக் காரியதரிசி திரு செ. கோவிந்தசாமி அவர்கள் சிவபாதசுந்தரனுரின் தொண்டுகளைப்பற்றிப் பேசினுர்.

### இந்திய முஸ்லிம் இளைஞரின் காஷ்மீர் இயக்கம்

அசாத் காஷ்மீரில் பிரவேசிப்பது போன்ற எவ்வெவ்வித நடவடிக்கைபற்றியும் நாங்கள் இன்னும் ஆலோசிக்கவில்லை. இந்திய முஸ்லிம்களுக்கு நிலைமையை நாங்கள் விளக்க வேண்டியிருக்கின்றது எங்கள் முன்னணி எந்த அரசியற்கட்சியுடனும் சேர்ந்ததல்ல. அசாத் காஷ்மீர் மக்கள் பாக்கிஸ்தானிடமிருந்து விடுதலை பெறுவதையே விரும்புகிருர்கள். அவர்கள் முஸ்லிம்களென்ற காரணத்தால் அவர்களைப் பாக்கிஸ்தான் நசுக்கிவைத்திருக்கின்றது என்று பாக்கிஸ்தான் வசமுள்ள அசாத் காஷ்மீரை விடுதலை செய்யும் முயற்சியை மேற்கொண்டுள்ள இந்திய முஸ்லிம் இளைஞர் முன்னணித் தலைவர் ஸ்ரீ அப்துல்கையும் ஆன்சாரி பம்பாயிலிருந்து தமது கருத்தை வெளியிட்டிருக்கின்ருர்.

### இலங்கை இந்தியர் பிணக்கு

—0—

இலங்கை இந்தியர்பிணக்குப்பற்றி இந்திய அரசாங்கத்துடன் எதிரில் வரும் ஐப்பசி மாசத்தில் முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக பேச்சுத்தொடங்குவாராம் பிரசாவுரிமைப் பதிவுவேலைகள் முடிந்து பதிவுக் காரியாலயமே புரட்டாதி மாசத்தில் மூடப்படக்கூடுமென்றும் கூறப்படுகின்றது.

### ஸ்ரீ தேவதாஸ் காந்தி மறைவு

மகாத்மா காந்தி அவர்களின்மகனும் ஸ்ரீ சி. இராசகோபாலாசாரியார் அவர்களின் மருமகனுமாகிய ஸ்ரீ தேவதாஸ்காந்தி அவர்கள் திடீரென ஏற்பட்ட இருதய நோய் காரணமாய் எம்மை விட்டுப் பிரிந்து விட்டாரென்னும் துக்க செய்தி யாவருக்கும் அதிர்ச்சியையும் பெரும் துன்பத்தையும் தருகின்றது.

பத்திரிகை ஆசிரியராகவும் பிறவாறும் மரபு பிறழாது அவர் செய்து வரும் சேவைகள் மிகப்பல. சேவைக்கென அவதரித்தவர்களில் ஒருவராகிய இவர் இளம் வயசில் இவ்வுலக வாழ்வை நீத்தமை வருத்தத்தை அதிகரிக்கின்றது.

### இந்து அறநிலையச் சட்டம்

இந்து அறநிலையச் சட்டத்தில் வேண்டிய திருத்தங்கள் செய்யப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தபோதிலும் மேலும் கால தாமதமின்றி அது சட்டமாகுமென்று கூறப்படுகின்றது.

# கூட்டுறவு மகாநாடு

சென்றவெள்ளிக்கிழமை (2-8-57) யாழ்ப்பாணம் உரேயல் படமாளிகையில் வடபகுதிக் கூட்டுறவு மகாநாடு நடைபெற்றது.

வடபகுதிக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. வீ. வீரசிங்கம் அவர்கள் அத்தருணம் பேசும்போது உற்பத்திப் பெருக்கம் சிறந்த விநியோகமுறை ஆதியவற்றின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான நடவடிக்கைகளை மேற் கொள்வதில் கூட்டுறவு இயக்கம் பின் நிற்கவில்லை. ஒரு பிரதான இலட்சியத்துடன் ஆரம்பமான கூட்டுறவுச் சங்கங்கள் பல துறைகளில் முன்னேறியிருக்கின்றன. கூட்டுறவு இயக்கம் சனங்களின் இயக்கமாகும். சர்வாதிகார ஆட்சி குறுக்கிட்டால் வளர்ச்சி பாதிக்கப்படும். இலங்கையில் பல துறைகளிலும் கூட்டுறவு இயக்கம் முன்னேறிக்கொண்டு வருதல் எங்களுக்குப் பெருமை அளிக்கின்றதுஎன்று கூறினுர்.

தொடர்ந்து பேசும் போது, கூட்டுறவு இயக்கத்தில் ஓர் சீர்திருத்தம் வரவேற்கத்தக்கதா யிருக்கின்றது, இதற்கு வேண்டிய நடிவடிக்கைளைக் கூட்டுறவாளர்கள் எடுத்து வருகின்றனர். மந்திரியும் இதில் ஊக்கங்காட்டி வருதல் மகிழ்வளிக்கின்றது என்று கூறினுர்.

# சைவத் திருநெறி

## மாவிட்டபுரத்திற் சைவப்பிரசங்கம்

நிகழும் ஆடிமீ 10ந் உ 25-7-57 வியாழக்கிழமை இரவு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா முடிந்து தீர்த்தோற்சவம் நிகழமுன் கீரிமலைச் சிருப்பர் மடத்தில் தீர்த்தமாடவும் மறுநாள் வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசைநோன்பு நிறைவேற்றவும் திரண்டு வந்த பல்லாயிரக்கணக்கான சைவநன்மக்களுக்கு திரு. பொன். அப்புக்குட்டி அவர்கள் "சைவத் திருநெறி" என்னும் பொருள் பற்றி ஓர் சிறந்த சைவப்பிரசங்கம்செய்தார். அவர் பேசும் போது சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதிற் சார்ந்த தெய்வத்தின் மேல் தெய்வமில்லை. தன்னூன் பெருக்கற்குப் பிறிதினுனுண்பான் - எங்ஙனமாளுமருள் என்று புலாலுணவை நீக்கும் சிறந்த பெருந் தருமத்தை மற்ற எச்சமயமும் ஏற்காத இத்தூய கொள்கையை—தன் பண்புகளில் ஒன்ருகக் கொண்டு விளங்குவது சைவம். தெய்வச் சபையைக் காட்டுவது சைவம். ஐந்தெழுத்துந் திருநீறுங் கண்டிகையும்பொருளாய்க் கொண்ட நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெருவாழ்வையளித்து முத்திப் பேற்றையளிக்கும் தனிச் சிறப்புடையது சைவம். இராசாங்கத்தில் அமர்ந்தது சைவம். இதிற் பிறக்க, வாழப் பாக்கியமுடையவராய்த் திகழ்தல் முற் பிறவிகளில் செய்த பெருந்தவப்பேறே.எனவே சமய தீக்கை பெற்று விபூதி உருத்திராக்க மணிந்து சரியை கிரியை யோகம் செய்து அருள் பெற்று மெய்யன்பராய் அரனடிக் கீழ் முத்தி பெறப் பாடுபடுவதே எம் குறிக்கோள். எமன் எம்முயிரைக் கவர எப்பொழுதும் வருவான். பொன்னெடும், போகான் பொருளொடும் போகான் நல்குரவறியான் செல்வரென்றுன்னுன் தரியானெருகணம் தறுகணுளன். ஆகையால்இன்னே ஆவன செய்ய எழுமின் விழிமின் என்று உற்சாகமூட்டினுர்.

## உ
## சைவ சித்தாந்த வகுப்பு

———0———

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாதரவில் நீண்டகாலம் சபை நாவலர் மண்டபத்தில் சித்தாந்த வகுப்பை நடத்தி வந்த பெரியார் திரு. சி. நாகையா B. A. அவர்கள் தமது உடல் நலக் குறைவால் சில மாதங்களாக ஷெ வகுப்பை நடத்த முடியாமற் போயிற்று. கடவுள் திருவருளால் அவருடைய தேகநிலை திருந்திவிட்டது. இனிமேல் சித்தாந்த வகுப்பை வழமைபோல சபை நாவலர் மண்டபத்தில் சனிக்கிழமைகடோறும் பி. ப 3 மணிக்கு ஆரம்பித்து நடத்துவார்கள். இப்பொழுது அவர் கற்பிக்கத் தொடங்கும் நூல் 'சிவஞானமாபாடியமாகும்' குறித்த வகுப்பிற் சேர விரும்புகின்றவர்கள் யாவரும் அழைக்கப்படுகின்றனர். அடுத்த சனிக்கிழமை (10-8-57) முதல் வகுப்பு ஆரம்பமாகும்.

சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம, 31-7-57. — மு. மயில்வாகனம், சமயப்பிரசார அமைச்சர்.

M 72 2, 9, 16-8-57.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்திய இசைக்கலையின் மாண்பு

## மனத்தூய்மையுடன் மேலான இன்பந்தருவது

சங்கீத பூமி என்று சிறப்பித்துச் சொல்லக் கூடிய பெருமை வாய்ந்ததாயிருக்கின்றது இந்திய நாடு. தலை சிறந்த இசை முறை ஒன்றை இந் நாடு வளர்த்துவந்திருக்கின்றது. இசை உணர்ச்சியை வெளிப்படுத்தும் புதிய முறைகளைக் கண்டு பிடிப்பதில் மனிதனுடைய விவேகம் எவ்வளவு தூரம் சென்றிருக்கின்றதென்பதை இந்நாட்டு இசை முறை காண்பிக்கின்றது. இந்தியாஎடுத்தாளும் இசைக் கொள்கையானது இந்நாடு உலகுக்குக் கொடுத்த ஓர் பேருபகாரமாயமைகின்றது. மக்களின் சுவைச் சிறப்பைக் காண்பிப்பனவா யமைந்திருக்கின்றன இந்திய இராகங்கள்; சிறிது இசைப் பயிற்சியுடன் இவ்வுண்மையை எவரும் அறிதலாகும். இந்திய மக்களின் உயிர் வாழ்க்கையில் ஒன்றுபட்டதாயிருக்கின்றது இசைச் சுவை. உள்ளத்திலிருந்து இன்பக் கிளர்ச்சி எழச் செய்யும் நிகழ்ச்சிகளுக்கு மாத்திரமல்லாது மக்களை மேன்மை பொருந்திய மன நிலைக்கு உயர்த்திப் பேரின்பந் துய்த்தற்கு உதவுவதாயிருத்தலினாலும் இசைக் கலையானது போற்றப் பெற்றுவருகின்றது. நியாய எல்லைக்குட்பட்டதாயிருத்தலும் உண்மை உணருந் திறன் தருவதாயிருத்தலும் இந்திய இசைக் கலையின் இரு பெரும் சிறப்புக்களாகும்.

இசைக் கலையின் ஒவ்வொரு துறையிலும் இந்தியா வளம் நிறைந்ததாயிருக்கின்றது. எந்த இசை வல்லுனரும் உன்னுதற்கரிய சுருதி இராகம் தாளம் ஆகியவை பொருந்தி நிறைவுற்றதாயிருக்கின்றது இந்திய இசைக் கலை. தனி இசை, அருள் இசை, நடன இசை, நாட்டிசை, நாடக இசை ஆதிய பல இசை முறைகள் இந்தியாவில் அமைந்திருக்கின்றன. பல்வேறு இசைக் கருவிகளையுமுடையதா யிருக்கின்றது இந் நாடு. இந்நாட்டு இசைக்கு வேண்டப்படாததாகிய பெட்டி வாத்தியம் (பியானே) ஒன்று தவிர மற்றெவ்வித கருவியும் இந்நாட்டிலுள்ளது. சிறந்த இசைப் புலவர்களை இந்நாடு தந்திருக்கின்றது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாயும்சென்ற மூவாயிரம் ஆண்டு காலத்தைத் தழுவியவையாயுமுள்ள இந்திய இசைநூல்கள் உலகின் தலை சிறந்த இசை நூல் வரிசையில் அமைந்திருக்கின்றன. பல்வேறு விழாக்களுக்கும் சுவைகளுக்கும், பல்வேறு பிரிவினருக்கும் பொருத்தமான இசை முறைகள் இந்நாட்டில் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

ஆதிகாலந் தொடக்கம் இசைக் கலைக்குப் பேர் பெற்றதாயிருந்து வருகின்றது தென் இந்தியா. கர்நாடகம் இந்துஸ்தானி ஆகிய இருவேறு இசை முறைகளையுடையதாய் இந்நாடிருத்தல் உலகில் இது ஓர் உப கண்டம் எனப்படும் பெருமைக்குப் பொருத்தமானதாயுள்ளது. இவ் விரு முறைகளும் ஒன்றேயாயுள்ள ஆதிஉற்பத்தியிலிருந்தே தம் வளர்ச்சிக்கு வேண்டும் சத்துப் பொருள்களைப் பெறுகின்றன. இந்துஸ்தானி இசை இந் நாட்டில் உருவானமை தற்செயலாய் உண்டான ஓர் சரித்திர நிகழ்ச்சியாகும். மோகல் அரசர்கள் காலத்தில் பல பேர்சிய, அரேபிய இசைக் கலைஞர்கள் அவர்களின் அரண்மனைகளுக்கு வரவழைக்கப்பட்டார்கள். அக் கலைஞர்கள் தங்கள் முறைகளைக் கொண்டு வந்து இந்திய இசையுடன் கலந்தமையால் ஒருவாறு இன்றுள்ள வடஇந்திய இசை உண்டாயிற்றெனலாம். ஆனல் இந்துஸ்தானி இசை உருவாதற்கு ஏதுக்களாயிருந்த புறச் சக்திகளால்தாக்கப்படாது பண்டைக்கால இசையே தென் இந்தியாவில் வளர்ந்து வந்தது. இவ்விரு துறை இசைகளும் பலநூற்றுண்டுகளாய் வளர்ந்தபின்பும் இசைப் புலவர்களாயினேர் இதுபற்றி என்றென்றும்பொதுப்படப்பேசிவிளக்கி வந்தார்களேயன்றி இந்துஸ்தானி கர்நாடகம் என்று வேறுபடுத்திப் பேசினரல்லர் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. இரு துறைகளையும் முதன்முதலில் வேறுபடுத்திக் காண்பித்தவர் ஹரிபால தேவ என்பவராவர்.

இசைக்கருவி அமைப்பில் இந்தியா மேலிடம் பெற்றுள்ளது. கருத்தைக் கவரும் சக்கர — பந்தம், பந்த — தந்தம் போன்ற முறைகளுடன் வீணையில் விரல்செய்யும் பெரியதோர் சித்திரச் சிறப்பை இந்தியா வளர்த்துள்ளது. கொட்டு, குழல் முதலியவை தனிப்பட்ட தொனிச்சிறப்பமைந்திருக்கின்றன. மிருதங்கம், தவில், கடம், கஞ்சிரு, சுத்த மத்தளம், பஞ்சமுக வாத்தியம் முதலிய கருவிகள் சிறந்த இசைமுறைகளைத் தருபவையாயிருக்கின்றன.

"தியாகராசர்" என்பது தற்காலத் தென் இந்திய இசை உலகில் மிக மேலான பேர். பலமுகத் திறமை வாய்ந்த அதிவிவேகியாய் அவர் (தியாகராச சுவாமி) இருந்திருந்திருங்கின்றார். "கிருதி" யைத் திருத்தி அமைத்தவர் அவர். "சங்கதி" என்னும் சிறப்பைப் படைத்தவர் அவர். அதிறி செறிந்த கிருதிகள், கீர்த்தனங்கள், திவ்விய நாம கீர்த்தனங்கள், கீர்த்தன சதகம் முதலிய பலவற்றை அவர் ஆக்கித் தந்துள்ளார்.

இந்திய நாட்டுப் பாடல்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. கும்மி, கோலாட்டம், பின்னற்கோலாட்டம் ஆகிய ஒவ்வொன்றும் ஒவ்வோர் தனிச் சிறப்புடையதாயிருக்கின்றது. அம்மானை, அருவிப்பாட்டு, உலக்கைப்பாட்டு, கப்பற்பாட்டு முதலிய ஒவ்வொன்றும்தனிச் சிறப்புடையவையாயிருக்கின்றன.

இன்ன பிறவோடு பல பூர்வ இசைச்சிறப்புச் சரித்திரங்களையும் உடையதாய் இன்று இந்தியா இலங்குகின்றது.

(பேராசிரியர் ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி "டிவைன லைப்" பத்திரிகையில் இந்திய இசைக்கலை பற்றி எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் சாரம்).

---

திருக்கேதீச்சரத்தில்

# விநாயகப் பிரதிஷ்டை

ஆதியிலே காடாய்க் கிடந்த திருக்கேதீச்சரதலம் ஆராய்ச்சி செய்யப்பட்ட பொழுது எடுக்கப்பட்ட விக்கிரகம் விநாயக விக்கிரகமாகும். இவ் விக்கிரதத்தைப் பக்தி சிரத்தையோடு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சீடராகிய சித. மு. பசுபதிச் செட்டியாரவர்கள் அல்லும் பகலும் திருக்கேதீச்சரத்தில்வைத்துப்பூசித்தார்கள்.

செட்டியாரவர்கள் அங்குள்ள காடுகளை வெட்டிப்

............... ... ..............

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

............... .... ..............

புதைபொருள் ஆராய்ச்சி செய்து பழைய வானலிங்கத்தை எடுத்தார்கள். அவ்விலிங்கம் இப்போது ஒரு பக்கத்தில் பழுதுற்றிருக்கிறது. இதனேடு நந்தியும் எடுக்கப்பட்டது. இப்போது கோயிலின் முன்மண்டபத்தில் வைக்கப்பெற்றிருக்கும் நந்தி இதுவே. நாம் எந்த விஷயத்திற்கும் விநாயகரை முன்வைத்தே பூசிக்கிறோம். ஆலயங்களிலும் முதல்விநாயகருக்குப் பூசை செய்வார்கள். ஆகவே இவ் விநாயகர் கோயிலைக் கட்டிப் பிரதிஷ்டை செய்யப் பலர் எதிர்பார்த்திருந்தனர். அங்ஙனம் எதிர்பார்த்திருந்தோருள் சைவப் பெரியார் ஸ்ரீமத் சிவபாத சுந்தரம் அவர்களும் ஒருவராவர். பெருமைமிக்க செல்வவிநாயகருக்கு எவர்கள் கோயில் கட்டிப் பிரதிஷ்டை செய்கிறார்களோ! அவர்கள் அட்ட ஐசுவரியமும் தீர்க்காயுளும் பெற்று வாழ்கின்றார்கள். திருப்பணிச்சபையார் விநாயகரின் மேல் பண்டிகை வேலையைக் கூடியளவு செய்துமுடித்து பிரதிஷ்டை செய்வது உத்தமமாகும். அப்படிச் செய்தால் ஏனைய சுற்றுப்புறக் கோயில்களின் திருப்பணியும் விரைவில் முடியும்.

சைவத் தொண்டர்களாகிய அடியவர்கள் செய்யும் பணிக்கு அல்லல் நேராமல்—ஐந்துகரத்தெம் ஆதி முதல்வராகிய செல்வ விநாயகப் பெருமான் திருவருள் புரிவாராக.

---

# சமஷ்டியினர்-முதல்மந்திரி பேச்சு

### ஸ்ரீ முன்னேஸ்வர மகோற்சவம்

—0—

ஸ்ரீ முன்னேஸ்வரம் திருக்கோயிலில் வருடந்தோறும் நடைபெறும் திருவிழா, நிகழும் ஆடி மீ 28-ந் திகதி (12-8-57 திங்கட்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது. (1) சிவனடியார் திருவிழா ஆவணி 18உ (3-9-57) செவ்வாய், பிக்ஷாடனர்திருவிழா 19உ (4-9-57) நடேசர் திருவிழா, 20உ (5-9-57) வேட்டைத்திருவிழா, 21 உ (6-9-57) தேர்த் திருவிழா 22 உ (7-9-57 நடைபெற்று ஆவணி 23-ந் திகதி (8-9-57) ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

—0—

### சமரச ஒப்பந்தம்பற்றி சிங்கள பெரமுனை

கண்டியிற் சிங்கள பெரமுனைக் கூட்டமொன்று நடைபெற்றது. பண்டாரநாயக தமிழரசுக் கட்சி ஒப்பந்தம் அதிற் பலமாகத் தாக்கப்பட்டது.

சிங்கள சமுதாயத்திற்கு முதல் மந்திரி துரோகம் செய்துவிட்டார் அவர் உடனடியாக ஒப்பந்தத்திலிருந்து நீங்கிவிட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தமது பதவியிலிருந்து முதல்மந்திரி உடனே நீங்கிவிடவேண்டும் என்று அக்கூட்டத்தில் தீர்மானஞ் செய்யப்பட்டது.

### தமிழர் மகாநாட்டுக் கருத்து

சென்ற சனிக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் முற்றவெளியில் தமிழர் மகாநாட்டுக் கூட்டமொன்று நடைபெற்றது. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களும் ஏனைய பேச்சாளர்களும் சமஷ்டிக் கட்சியார் முதல்மந்திரியுடன் செய்த சமரச ஒப்பந்தத்தை வன்மையாகக்கண்டித்தனர்.

திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்கள் பேசும்போது சிங்களத்துடன் தமிழ் மொழிக்குச் சமத்துவம்தான் பெறமுடியாமற்போனலும் அதற்கு உத்தியோக அந்தஸ்தாகுதல் கேட்டுப் பெற்றுக்கொள்ளத் தமிழரசுக் கட்சியார் தவறிவிட்டனர். தமிழரசுக் கட்சியினர் முதல்மந்திரியுடன் செய்துள்ள ஒப்பந்தம் சரித்திரமே கண்டறியாத ஒரு இழிவான ஒப்பந்தமாகும். எந்த ஒரு அந்தஸ்தையும் பெறத் தவறிய இந்த ஒப்பந்தம் சிறுபான்மையினரின் தேசியமொழி என்ற அந்தஸ்தைப் பெற்றுத் தந்திருக்கின்றது. வேடர் பேசும் மொழிகூட சிறுபான்மையரின் மொழிதானே. கட்சி வேறுபாட்டை விட்டுத் தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கவேண்டும். தமிழ்இனத்தின் எதிர்காலச் சுபீட்சத்திற்காக, நல்வாழ்வுக்காக, அதை எதிர்த்துக் கிழித்தெறியச் செய்யவேண்டும் என்று கூறினர்.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம் அவர்கள் பேசும்போது அரசியல் என்பது நுணுக்கமான ஒருஞானம்; தமது அரசியல் ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு திரு. பொன்னம்பலம் ஒப்பந்தத்தை ஆராய்ந்துள்ளார். ஒப்பந்தம் தமிழினத்துக்கு எதிரானதா? சார்பானதா? என்பதை அந்தஅரசியல் ஞானத்தை அடிப்படையாகக்கொண்டு திரு பொன்னம்பலம் ஆராய்ந்துள்ளார். குறித்த ஒப்பந்தம்பற்றிச் சரியான விளக்கத்தை முதல் மந்திரியோ திரு. செல்வநாயகமோ இன்னும் வெளியிடவில்லை. எனினும் தமிழ் மொழிக்குச் சமஅந்தஸ்து இல்லை என்பதை முதல் மந்திரி தெளிவாகச்சொல்லிவிட்டார் என்றுகூறினர்.

தமிழன் தன் மொழியை எப்படியும் பாதுகாப்பான் என்ற எண்ணம் இன்று மிகவும் வருந்தத் தக்க நிலையில் மாறிவிட்டது. தமிழனைக் காக்கப்போவதாக முன் வந்த ஒரு கட்சி இன்று இலங்கை முழுவதிலும் சிங்களத்தை ஒப்புக்கொண்டுவிட்டது. குடியேற்றத் திட்டங்கள்பற்றித் தமிழரசுக் கட்சி சொல்வதற்கு முரணாக முதல் மந்திரி சொலலி வருகிறார் என்று திரு. எம். சிவசிதம்பரம் அவர்கள் பேசும்போது கூறினர்.

ஒப்பந்தத்தால் ஏற்பட்ட அவமானத்தைத் துடைத்து எம் எதிர்கால சுபீட்சத்தைப் பேணுவது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை எனறார் பரமேசுவர கல்லூரித் தலைமை ஆசிரியர் திரு. எஸ். சிவபாதசுந்தரம் அவர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கரம்பன் மங்கலவார மடம் விசேட மகேசுரபூசை

ஏறக்குறைய ஒருநூற்றுண்டுக்கு முன் வண்ணுர்பண்ணையில் பிரபல தனவந்தராக வாழ்ந்த ஸ்ரீ. சிதம்பரசுப்பையச் செட்டியார் அவர்களால் பல தர்மநிலையங்கள் தாபிக்கப்பட்டன. பண்ணைத்துறை மடம், குறிகாட்டுவான்மடம், அராலித்துறை மடம், கரம்பன் மங்கலவாரமடம் ஆகியவை பிரயாணிகள் தங்குவதற்கும் போசனுதிகள் முதலிய வசதிகட்குமாய் ஏற்பட்டவை. அத்தோடு யாழ்ப்பாணம் வண்ணை — வைத்தீஸ்வரசுவாமிகோவில் நடராஜப் பெருமானுக்கு நித்திய உச்சிக்காலக் கட்டளையும் மாசக் கார்த்திகை நட்சத்திர பூசைக் கட்டளைகளும் அப்பெரியாரால் ஏற்படுத்தப்பெற்றுக் காணிகளும் எழுதிக்கொடுக்கப்பட்டு இன்றும் செவ்வனே நடந்துவருகின்றன.

மேலே குறிக்கப்பட்ட கரம்பன் மங்கலவாரமடம் காலஞ்சென்ற ஸ்ரீமான் சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார் அவர்களால் 1929-ம் ஆண்டில் சீரணோத்தாரணம் செய்யப்பெற்று வருடந்தோறும் தை, ஆடி மாசங்களில் வரும் செவ்வாய்க்கிழமைகள் தோறும் மகேசுர பூசை நடைபெற்றுவருவது வழக்கம். இதன்பிரகாரம் நிகழும் ஏவிளம்பிஸு ஆடி௴ 29௳ (13-8-57) காலை விசேஷ சிவபூசையும், தேவாரபாராயணமும் பின் அன்னதானமும் நடைபெறும். —கடித.

## மாண்புமிக்க மாசி உத்தரமே........

2-ம் பக்கத் தொடர்ச்சி

அன்றி மாசி உத்திரத்திலோ வள்ளுவருக்கு விழா எடுத்தால் போதாது. அவரது கருத்துக்கு மாறுபடாதன நிகழ வேண்டும். "வாழும் முறை இது — வாழ வேண்டிய நெறி இது— வையகத்தீரே! உங்களது உள்ளக் கோவிலிலே இந்த ஒப்பிலா ஒழுக்கத்துக்கு உயரிய இடம் கொடுத்து நயம்பெற வாழுங்கள்" என்றுதான் குறள் நூலை உலகுக்கு வள்ளுவர் உதவிச் சென்றுர். அதற்கு மாறுனவாழ்க்கையைச் சைவமக்கள் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். தமிழ் மறை வகுத்த வழியில் வாழ்க்கையை வளம்பெற நிகழச் செய்வதையே என்றென்றும் யாவரும் விரும்புவார்கள். அன்னவருக்கு தமிழ்மறைக்கழகமும் அதன் தலைவரும் முன்மாதிரி காட்ட வேண்டும்.

"ஆற்றுவார் ஆற்றலிகழாமை
போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை"

என்கின்றது தமிழ் மறை. ஆகவே அறிவாற்றலில் ஆராய்ச்சி ஆற்றலில் ஒப்பாரும் மிக்காருமில்லாத நாவலர் பெருமான் குறிப்பிட்ட மாசி உத்தரத்தில் திருவள்ளுவர் திருநாளை எதிர்காலத்தில் நிகழச்செய்து தமிழ்மறைக் கழகத் தலைவரும் கழகத்தாரும் பேச்சு முன்மாதிரியை இதுபொழுது ஒருபுறம் வைத்து, வாழ்க்கை முன்மாதிரி காட்டுவார்களாக. தமிழ்மக்களிடையில் உண்மையான ஒற்றுமையை உண்டாக்கக்கூடிய இந்த உயர்ந்த நெறியைக் கடைப்பிடிப்பார்களாக.

வாழ்க மறைநெறி!
வாழ்க அறநெறி!!

## முதுபெரும்புலவர் உயர்திரு வெ. ப. சுப்பிரமணிய முதலியார் ................

1-ம் பக்கத்தொடர்ச்சி

எனும் நல்லந்துவனுர் கூற்று நினைவிற்கு வருகிறது.

'இம்முதுபெரும் புலவர் நம்மனோரை நோக்கி, ருபெர்ட் பிரவுணிங் (Robert Browning) எனும் ஆங்கில மகாகவியின் உரையே தம்முரையாக,

"எண்ணொடு,
யாண்டு பலவாக
நீவிரும் வாழுமின்;
காண்டகு செம்மை
ஈண்டுதற் குரிய
நாள்பலவாக
நலம்பல பெறுகுவீர்;
வாணுள்,
பின்னவைக் காக
முன்னவை இயைந்தன
அனைத்தும் ஒருபிழம்
பதனுள் இளமை
ஒருபாற் பயனை
உணர்த்தும்மற் ெறுருபால்
அமைதியுங் காண்மின்
அச்சம் அகற்றுமின்
நாதனை நப்புமின்
எனஅவன் நவின்ற
போதம் உளநம்
வாணுள் அனைத்தும்
அவன்திருக் கரத்தில்
அமைந்தன கண்டீர்"

என அறிவுரை கூறி வாழ்த்துவார் போலும்."

"தொண்டை மண்டலத்
தொல்வே ளாண்குலப்
பண்டைநற் பண்புகள்
பலவும் பாங்கினில்
விளங்கும் குலநல விளக்கு"

என்றும்,

"பணத்தால் மேன்மைக்
குலத்தால் நல்வங்—
கணத்தால் உயர்கவி
மணத்தால் ஆயிரம்
முழுமதி நோக்கிய
செழுமையாற் பெரியோன்"

என்றும் - எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவில் ஆயிரம்பிறைநிறைந்த அகவையில் அருந்தமிழ்ச் சான்றோர்வாழ்த்திய பெரியாரை நினைந்து அவர் வகுத்த வழி நின்று பயன்பெறுவோமாக.

முதுபெரும் புலவர் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஆக்கிய நூல்கள்:

1 **சுவர்க்க நீக்கம்:** ஆங்கிலப்பெருங்கவிஞர் மில்ற்றனுர் இயற்றிய Paradise Lost என்னும் ஆங்கிலப் பெருங்காப்பியத்தின் செய்யுள் மொழிபெயர்ப்பு - விரிவுரையுடன்; 2 **கோம்பி விருத்தம்** மெரிக்கனுர் என்னும் ஆங்கிலப் புலவர் இயற்றிய செய்யுள் நூலின் மொழிபெயர்ப்பும் விளக்கமும்; 3 **நெல்லைச்சிலேடை வெண்பா;** 4 **இந்து தேசக் கால்நடை நூல்கள்** (Veterinary Science) 5 இராமாயண உள்ளுறைப் பொருளும் தென் இந்திய ஜாதி வரலாறும், 6 **கல்வி விளக்கம் ;** ஏர்பாட் ஸ்பென்ஸர் எழுதிய 'கல்வி என்னும் நூலின் மொழிபெயர்ப்பு, 7 **அகலிகை வெண்பா** 8; **கம்பாராமாயண சாரம் (1-5)** காண்டம், 9 **சருவசன செபம்:** ஒழுக்க நெறியின் விழுப்பத்தினை இனிது விளக்கும் சிறந்த செய்யுள் நூல், 10 **மில்ற்றனுர்சரித்திரம்** 11. **பகவத்கீதை:** செய்யுள், 12 **தனிக்கவித்திரட்டு** என்பன. இவர் இயற்றிய நூல்களும், மொழிபெயர்ப்புக்களும், உரைகளும் தமிழகத்துப் பேராசிரியர் பலராலும் போற்றப்படுகின்றன. இவற்றுள், தலைசிறந்த நூல் 'சருவசன செபம்' எனலாம்.

---

## திருக்கேதீச்சரத்தில் சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை

கொழும்பு சைவமங்கையர் கழக மாணவிகளும் ஆசிரியைகளுமாகிய பலர் 2-8-57ல் சுந்தரமூர்த்திநாயனர் குருபூசைத் தினத்தன்று திருக்கேதீச்சரக் கோயிலில் அபிடேக பூசைகள் செய்தும் திருமுறைகளும் ஓதினர். மகேஸ்வர பூசையும நடைபெற்றது.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 11—8—57 —— 17—8—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

விசேட கருமங்களில் இந்த வாரம் நீர் எந்த ஒரு தீர்மானத்துக்கும் வருவதில் வருத்தப்படுவீர். புது முயற்சிகள் தாமதிக்கப்படும். நண்பரிடையில் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு குடும்பக் குழப்பங்களுக்கும் இடமில்லாமலில்லை,

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இனத்தவர்களுடன் இந்தவாரம் சண்டைகளுக் கிடமுண்டு. சிறு அபாயங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும், பணத் துறையில் ஒரு நல்லவாரம், ஆனல் குடும்பக் கருமங்கள் அதிகம் நல்லாயிருக்கமாட்டா, போட்டியிடுவோரை வெல்லுதல் வாரஇறுதியில் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

வாரத்தின் முதல்நாள் ஏமாற்றமானதாயிருக்கும். உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது, நடுவாரத்தின்பின் கருமங்கள் திருந்தும், வார இறுதி நல்ல புதினத்தைத் தரும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

நீர் இந்தாரம் அளவுக்குக்கூடிய வேலை சுமத்தப்படுவீர். சுகவீனங்களுக்குமிடமுண்டு, ஞாயிறு திங்களும், செவ்வாய் காலையும் கவனமாய்க் கழிக்கப்படுதல் வேண்டும். நண்பருடன் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. பேராபத்துக்களை நீகக வேண்டுமானல் தாழ்மையாய் ஒழுகிக் கோபத்தை அடக்குக.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்,

பணத்துறையில் நல்ல வாரம். ஆனல் மனச் சமாதான மிருக்க மாட்டாது. குடும்பக் கருமங்கள் ஒழுங்குபண்ணப்பட மாட்டா. மேலதிகாரிகளுடன் சண்டைகளுக்கிடமில்லாமலுமில்லை. செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உத்தியோக கருமங்களுக்கு நல்லவாரம். ஆனல் சுகவீனங்களுக்கிடமுண்டு கண்நோய்களுக்கிடமுண்டு செலவும் அதிகரிக்கும், வாரத்தின் கடைசி இரு நாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

உம்முடைய உத்தியோக கருமங்களிற் சில திருத்தங்கள் இந்த வாரம் நிச்சயம், நீர் எதிர்ப்பை வெல்லக்கூடியதாயிருக்கும். வேலை கூடுதலாயிருக்கும்; நீர் உழைக்கும் காசு முழுதும் செலவழிக்கப்படும்.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அனுஷம், கேட்டை.

நெருக்கடி குறையும். [illegible] புதிய முயற்சிகள் நல்ல பலனைத் தரும். ஆனல் மனச் சமாதானமிருக்க மாட்டாது. இனத்தவர்கள் தொடர்ந்து தொந்தரவா யிருக்கின்றனர்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

நடுவாரத்தின் பின் தேகசுகம் சிறிது திருந்தும். ஆனல் இனத்தவர்கள்மூலம் விசேடமாய்ப் பிதாவழி இனத்தவர் மூலம் தொந்தரவுகளிருக்கும். செலவும் அதிகமாயிருக்கும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இரகசியப் பகைவரைப்பற்றி இந்தவாரம் எச்சரிக்கையா யிருக்கவும். சுகவீனங்களுக்கிடமுண்டு, கந்தோரில் தொந்தரவுகளுக்குமிடமுண்டு. சிறு அபாயங்களுக்குமிடமுண்டு. ஆனல் பிரதான கிரகங்கள் சுகமாயிருப்பதால் நீர் அதிகம் சலனப்பட வேண்டியதில்லை,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பக் கருமங்கள் இந்த வாரம் தளப்பமாயிருக்கக்கூடும். இடைவிடாதசண்டைகளும்பிழை எண்ணங்களுமிருக்கும். பணத்துறையில் நல்லவாரம். ஆனல் வேலை கூடுதலாயிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

உம்முடைய பகைவரின் வீழ்ச்சியை மிக விரைவிற் காண்பீர். புகழும் வழக்கில் வெற்றியும் நிச்சயம். உம்முடைய முயற்சியை முன்னேற்றுக. வாரத்தின் இறுதி காத்திராத இலாபங்களைத் தரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணை கிழக்கு 1. கார்த்திகேசு வைத்திலிங்கமும் பெண்
2. சிவஞானபூரணி,

வழக்காளிகள்

இல, MB 1474

எதிராக்

நல்லூர் அரசடி ஒழுங்கை
1 இளையவி கிருஷ்ணன்

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1474ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஸு புரட்டாதி ௴ 14௳ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:முதல்வட்டி ரூபா 3952-50 ம் இன்னும் ரூபா 5000/- த்திற்கு 7-2-1957 தொடக்கம் 9-5-1957 வரைக்கும் 12 வீத வட்டியும் பின் கூட்டுத் தொகைக்கு தீர்வைத் திகதி தொடக்கம் ஆறுபடும் வரையும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க்கோயிற்பற்று நல்லூர் இறை D 51/246 ல் பதியப்பட்ட தவசிவெளி தம்பிரான் மடமும் சுடுகாட்டுப் புலமும் என்னும் காணியின் தெற்குப் பாகமாகிய தவசிவளவு தம்பிரான் மடமும் சுடுகாட்டுப் புலமும் நி. ப. 3ம் குளி 6ம் கல்வீடும் செய் பயிர் வான் பயிர்களும் முருகர் இளையவியின் செல்லியான் குளம் எனும் காணி பர. நி. இ. 3 க்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் கிழக்கே இருக்கும் கை ஒழுங்கையாலும் அதிலிருந்து பிரியும் கை ஒழுங்கையாலும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு நல்லதம்பி கனக சபையின் ஆதனம் வடக்கு வேலு சின்னத்தம்பியின் ஆதனம். மேற்கு முருகர் இளையவிக்குரியகையொழுங்கை. தெற்கு இளையவி பழனித்துரையின் ஆதனமும் இன்னும் இக் காணியிலிருந்து யாழ்ப்பாணம் பருத்தித்துறை ரோட்டுக்கு போவதற்கு முருகர் இளையவிக்குரிய கிழக்கேயுள்ள கைஒழுங்கைப் பாவிப்புரித்தும்.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
24 சப்பல்வீதி
யாழ்ப்பாணம்
5-8-57,
M. 77 9-8-57.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டு தத்துவ வழக்கு இல. 200

நாகமுத்து சவிரிமுத்து சூசைப்பிள்ளை சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.

எதிர்

நாகமுத்து சவிரிமுத்து சூசைப்பிள்ளை சுண்டிக்குளி

தத்துவகாறன்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 200 ம் இலங்க தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஸு புரட்டாதி ௴ 7௳ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்,

காணி விபரம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் திரிக்கித் தோட்டம்என்னும் காணி நி, இ. 8,

எல்லை கிழக்கு Dr. ருசசிங்கத்தின் ஆதனமும் M. வயித்தியாம்பிள்ளையின் ஆதனமும்.

வடக்கும் மேற்கும் Dr. ருசசிங்கத்தின் ஆதனம்

தெற்கு பெரியதெரு

இதில்சொரியலாக நி. இ, ஏனில் பின்பக்கமாக நிந்தமாக நி, இ. ஐந்தும் கிழக்குப் பக்கமாக ஒழுங்கையுடன்,

வ. அ. துரையப்பா,
கொம்மிஷனர்,
யாழ்ப்பாணம்,
1-8-57.
M 76 9-8-57

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிக் கட்சியின் முதற் கூட்டம்

## கண்டனங்களுக்குச் சாவகச்சேரியிற் சமாதானம்

—0—0—

முதல்மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகவுடன் தமிழரசுக் கட்சி சமாதான ஒப்பந்தஞ் செய்து மட்டக்களப்பு மகாநாட்டில்வெளியிட்டுக் கட்சியின் அங்கீகாரம் பெற்ற பின் வடபகுதியில் முதற் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்றது. ஒப்பந்தம்பற்றிய மூன்று பெருங் கண்டனங்களுக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அக்கூட்டத்திற் பின்வருமாறு சமாதானஞ் செய்தார்.

யாழ்ப்பாண முற்றவெளியில் மூன்று பெருங் கண்டனங்களை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் வெளியிட்டார். அவற்றுக்குச் சமாதானம் சொல்லுதல் எங்கள் கடமையாகும்.

மலைநாட்டுத் தமிழர்நலன்களைத் தமிழரசுக்கட்சி கைவிட்டது என்பது முதலாவது. இதற்கு மறுமொழி மட்டக்களப்பு மகாநாட்டிற் கொடுக்கப்பட்டது. ஸ்ரீ தொண்டமானும் ஸ்ரீ அசீசும் எங்கள் கொள்கையைச் சந்தேகத்துக்கிடமில்லாதவாறு ஏற்றுக்கொண்டனர். இலங்கைச் சனநாயக மகாநாட்டுக் காரியதரிசி திரு. ஏ. வி. கந்தசாமி எங்கள் மத்தியிலிருக்கின்றார். மலைநாட்டுத் தமிழரின் கருத்தை அவர்உங்களுக்குச்சொல்லிவிட்டார்.

குடியேற்றம் பற்றியது இரண்டாவதாகும், இது எங்கள் சீவாதாரத்தைத் தாக்குவது. 1947-ம் ஆண்டு தொடக்கம் தமிழ்ப் பகுதிகள் சிங்களமக்களால் தீவிரமாகக் குடியேற்றப்பட்டு வருகின்றன. இக்குடியேற்றத்தைத் தடுத்தல்மேலான செயலாகுமென்று பல தமிழ்ப் பெருமக்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒப்பந்தத்தில் இதுபற்றிய பகுதி தெளிவாயிருக்கின்றது. வடபகுதிப் பிராந்திய சபைகளின் உரிமைகளை யாரும் எடுக்க மாட்டார்கள். குடியேற்ற வாசிகளுள் ஒரு பகுதியினரை மத்திய அரசாங்கம் தெரிவு செய்யும் என்று முதல்மந்திரி சொன்ன சொல்லுக் குறிப்பிடப்பட்டது. இது இருக்கவேண்டிய இடத்திலிருந்து எடுக்கப்பட்டுப் பிறபொருள் கற்பிக்கப்பட்டதொன்றாகும். முதல் மந்திரியின் கூற்று வளவைக் குடியேற்றத்தைப் பற்றியதேயாகும்.

மூன்றாவது தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து என்பதாகும். தமிழ்மொழிக்குச் சம அந்தஸ்து என்பதாகும். தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்னும் கொள்கையைத் தமிழரசுக் கட்சி என்றும் கைவிடப்போவதில்லை; சிறுபான்மையினரின் தேசிய மொழி எனக் கணிக்கப்பெற்றுத் தமிழ்மொழி வடக்குக் கிழக்குமாகாணங்களின் ஆட்சி மொழியாகும். சம அந்தஸ்துப் பெறும் வழியில் அரைவாசித் தூரத்துக்கு எங்களைக் குறித்த ஒப்பந்தம்கொண்டு போயிருக்கின்றது.

எங்கள் நாலு அம்சத் திட்டத்துக்கு எவ்வித இடைஞ்சலையும், குறித்த ஒப்பந்தம் உண்டாக்கவில்லையென்பதைத் தெளிவாக்க விரும்புகின்றேன் எங்கள் திட்டத்தை முன்னேற்றுதற்கு நாங்கள் பூரண சுதந்திரமுடையவர்களாயிருக்கிறோம். ஸ்ரீ பண்டாரநாயக ஒப்பந்தத்தை இயன்றளவு விரைவாய் நிறைவேற்றுவார் என்று நான் நம்புகிறேன்.

---


யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாபநிதி**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடீக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்


நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14







## அரசியல் அலை

—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றற் சொல்லுடை ஒருவன் சொல்வதெல்லாம் சொல்லாய்விடுமா?

ஒப்பந்தம் உருவாகிய இவ்வேளையிற் பனங்கொட்டைப் பட்டினத்துக்கு ஒரு முறை பண்டாரநாயக அவர்கள் வரக்கூடாதா? வந்து பனங்கொட்டைப் பண்பாட்டைப் பற்றி அறிந்து செல்லப் படாதா..........?

---

## மரண அறிவித்தல்

**யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச்சங்கம் லிமிற்ரெட்**

இல: 4, கண்டி ரேட், யாழ்ப்பாணம்.

பதிவு இல. M. 110

கீழ்க் காணும் மேற்படி சங்கஅங்கத்தவர் மரணத்திரையினுள் மறைந்ததைத் தங்களுக்கு மிகவும் விசனத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இறந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மரண சேவைப் பணத்தைச் செலுத்தவும்.

| இறந்தவர் இல. | இறந்தவர் பெயர் | விலாசம் | திகதி |
|---|---|---|---|
| 1237 | நா. சின்னத்துரை, | கில்னர்லேன் | 24-7-57 |
| 1654 | சுப்பிரமணியம் மீனும்பாள் | 37/5 வயிரவ கோவில் ஒழுங்கை இராசாவின்தோட்டம் ரேட் | 3-8-57 |
| 288. | சின்னக்குட்டி கைம்பெண் சின்னப்பிள்ளை | நந்தாவனம் வேம்படி ரேட்டு, | 6-8-57. |

இங்ஙனம்
த. இராசரத்தினம்
கௌரவ காரியதரிசி

M 78 9-8

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சுளிபுரம் இப்போ வறுத்தலைவிழான் பொன்னர் இராமசாமி வழக்காளி

எதிராக

இல. M B 584

1 சுளிபுரம் சோமனுதர் செல்வவிநாயகம்
2 ஷை வேலாயுதர் கந்தையா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 584 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ம் ஆ புரட்டாதி மீ 14 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பதினொரு மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 1548-ம் இதில் ரூபா 1000 க்கு 20-10-55 திகதி தொடக்கம் 8-2 56 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 9 வீத வட்டியையும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 236-54.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரம் இறை அறுகொல்லை நிலையும் நெல்லும் 9 பரப்பும் 4 குளியும் ஆனல் தற்போது அளவின்படி நெற்பரப்பு 11-ம் கிணறும் பனைகளும் எல்லை கிழக்கு ஞானமுத்து தம்பிப்பிள்ளை வடக்கு 1-ம் எதிரியின் காணி மேற்கு இராமலிங்கம் கைம்பெண் வேதவனத்துக்கும் பங்காளருக்கும் அரிகரபுத்திரசுவாமி கோயிலுக்குமுரிய காணிகள் தெற்கு கதிரேசபிள்ளை பெண் தெய்வானைப்பிள்ளை இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா,
A. S. Kandiah
கொம்மிஷனர்.

காரைநகர்
8-7-57.

M 80. 9-8

### கோட்டு விற்பனவு விளம்பரம்

நாரந்தனை நாகலிங்கம் விசுவலிங்கம் - வழக்காளி.

இல. M B 1491

எதிராக

வேலணைமேற்கு மருதையினர் தம்பு மகள் வேதநாயகி

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1491 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1957 ஆ புரட்டாதி மீ 6 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை :- முதல் வட்டி ரூபா 3576-67 ம் இதில் ரூபா 2000/- க்கு 13-2-57 திகதி தொடக்கம் 9-4-57 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 201-82.

காணி விபரம்

வட.மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று சரவணை இறை பெரிய சக்களாவு நெற்பரப்பு 17 5/8 ஷை பெரிய சக்களாவு நெற்பரப்பு 7¼ இரு பிரிவுங் கூடிய நெற்பரப்பு 24 7/8 ஆனல் ஆட்சிப்படி அளந்து கண்ட நெற்பரப்பு 25. எல்லை கிழக்கு செங்கமலையர் கனகசபாபதிப்பிள்ளையும் குளமும். வடக்கு கணபதி பெண் பொன்னம்மா மேற்கு முருகேசு பெண் நல்லமுத்துவின் உருமைக்காறருக்கும் தம்பையா பெண் பூரணத்துக்கும் தெற்கு தம்பையா பெண் பூரணத்துகும் மயில்வாகனம் பெண் கண்மணியின் உருமைக்காறருக்குமுரிய வாதனங்கள். இதடங்கலும்.

ஆ ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
22-7-57.

M 79 9-8-57

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 9-8-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org